1971 ஜூலை 22]

Employees of Standard Motors

* 374 Q.—THIRU O. N. SUNDARAM: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether all the employees who were working in the Standard Motors (Private) Limited, before its closure have been absorbed in service after the reopening of the factory; and

(b) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) சென்னையிலுள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை திறக்கப்பட்ட பிறகு இதுவரை 777 தொழிலாளர்கள் நிர்வாகத்தினரால் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ) பழைய தொழிலாளர்கள் அனைவரையும் குறிப்பிட்ட காலத்தில் திரும்ப எடுத்துக் கொள்ளாமைக்கு நிர்வாகத்தினர் கூறும் காரணம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கப் பெறாததும், இங்கிலாந்திலிருந்து சில மோட்டார் உறுப்புகள் வந்து சேராததும் ஆகும் என்று கூறுகிறார்கள். அந்த நிதியைப் பெற்றுத் தர மத்திய அரசோடு தொடர்பு கொண்டு விரைவில் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அந்த நிதியைப் பெற்றுத் தந்த பின் மீதியுள்ள தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த நிறுவனத்திற்குத் தேவையான பொருள் தேவையைப் பெற்றுத்தர அரசு முயற்சி எடுத்துள்ளது என்று சொன்னார்கள். அதற்காக என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன? இதுவரை பெற்ற நன்மைகள் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த நன்மைகளைக் கூறும் அளவுக்குப் பேச்சு வார்த்தைகள் முடியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இவ்வாண்டு ஜூன் மாதம் 23-ம் தேதிக்குள் எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று ஏற்கனவே நிர்வாகம் ஒப்புக் கொண்ட பிறகும் ஏன் கால தாமதம் ஆகிறது? எவ்வளவு நாளைக்குள் பாக்கி இருக்கும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட ஆயிரம் தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஸ்டாண்டர்டு மோட்டார் மானேஜ்மெண்டார் நான்கு திங்களுக்குள்ளாக எல்லாத் தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று ஒப்பந்தத்தில் சொன்னது உண்மைதான். ஆனால் அதற்கேற்றபடி அவர்களுக்கு வேண்டிய உதவி கிடைக்காததால் தாமதம் ஏற்படுகிறது. எந்த அளவுக்கு விரைவாக அவர்களுக்கு நிதியைப் பெற்றுத் தர முடியுமோ அந்த அளவுக்கு அரசு முயற்சியினைச் செய்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : இப்போது 777 பேரைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொண்டதாக அறிவித்தார்கள். அப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் சீனியாரிடிபடி எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தொழிலாளர்கள் போராடு கிறார்கள். சீனியாரிட்டிபடி, அதிகம் சர்வீஸ் பெற்றவர் என்ற அடிப்படையில் அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் குறைபாடு ஆரம்பத்தில் இருந்தது. ஐந்தாறு தொழிலாளர்கள் சீனியாரிடிபடி எடுக்கப்படவில்லை என்ற குறைபாட்டைத் தெரிவித்தவுடன் அரசு சார்பாக மானேஜ் மென்ட்டை அழைத்து இது போன்ற தவறுகள் நடக்கக்கூடாது, ஒப்பந்தப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது வலியுறுத்தப் பட்டது. அதற்குப் பிறகு இதுவரை அப்பேர்ப்பட்ட குறைபாடு கள் ஏற்படவில்லை.

திரு. ஏ. எம். இராஜா : இந்த ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனிக்காரர்கள் வங்கியின் உதவி கேட்டிருப்பதாகவும், அந்த உதவி கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அவர்கள் எவ்வளவு நிதி உதவி கேட்டிருக்கிறார்கள்? அந்த நிதி உதவி கிடைத்தால் இன்னும் எவ்வளவு பேரை அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள்? அதற்கு கண்டிஷன்ஸ் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : முதலாவதாக அங்கு 1,481 பேர் வேலை செய்து வந்தார்கள். அதிலே 777 பேர் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். அதிலே 757 பேர் தொழிலாளர்கள், 20 பேர் ஆபீசர்கள் நிதி உதவி கிடைத்த பிறகு விரிவான அளவுக்குத் தொழில் நடக்கத் தொடங்கியவுடன் மற்றத் தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

Report of Elayaperumal Committee on Untouchability

* 375 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether Central Government has sent any copy of the report of the Elayaperumal Committee on Untouchability; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) அறிக்கையின் விபரங்கள் பின்வருமாறு :—

இந்த அறிக்கையின் விபரங்களை கீழ்க்கண்ட நான்கு தலைப்பு களின்கீழ் வகைப்படுத்தலாம்.

பகுதி 1 தீண்டாமை